NLDB

# ජාතික පශු සම්පත් සංවර්ධන මණ්ඩලය - වාර්ෂික වාර්තාව 2011

# தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை - வருடாந்த அறிக்கை 2011

# NATIONAL LIVESTOCK DEVELOPMENT BOARD - ANNUAL REPORT 2011

| | |
|---|---|
| மகிந்தசிந்தனை | 3 |
| அமைச்சரின் செய்தி | 4-5 |
| பிரதி அமைச்சரின் செய்தி | 6-7 |
| தோலைநோக்கு | 8 |
| குறிக்கோள் | 9 |
| பொது இலக்கு | 10 |
| முக்கியநடவடிக்கைகள் | 11 |
| கூட்டுத் தகவல்கள் | 12-13 |
| பணிப்பாளர் சபை | 14-15 |
| முகாமைத்துவஅணியினா் | 16 |
| தலைவரின் அறிக்கை | 18-21 |
| பிரதி தலைவரின் அறிக்கை | 22-25 |
| மீளாய்வு நடவடிக்கைகள் | 26-41 |
| குடந்தஐந்துவருடத்தினுள் | 42-47 |
| நிதி அறிககை | 49-74<br>75-104<br>105-128 |

இலங்கையில் கால்நடைத்துறையில் முன்னின்று உழைத்தவர்கள் என்ற பெருமையை நிலைநாட்டிய தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை
தனது வர்த்தகசெயற்பாடுகளை ஆரம்பித்து 40 ஆவது வருடத்தில் தடம் பதிக்கிறது.

தற்போது இச்சபை கால்நடை மற்றும் தென்னைசெய்கை என ஒருங்கிணைந்த 30 பண்ணைகளை நிருவகித்துவருகின்றது. அதேவேளை விவசாயிகளுக்கென பாடநெறி மற்றும் நடைமுறை அறிவாற்றல்களை பகிர்ந்துகொள்வதற்கு பயிற்சி நிலையத்தினையும்நடாத்திவருகின்றது.



நாட்டில் தற்போதுள்ள 3 லட்சத்து 40 ஆயிரம் பால் தரும் பசுக்களின் எண்ணிக்கையினை இரண்டு மடங்குகளாக அதிகரிக்கச் செய்வதே எனது விருப்பம்.
இதனை எட்டுவதற்கு நாடளாவிய ரீதியில் பசுக்களின் இனவிருத்தி பண்ணைகளினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

அத்துடன் புதிய சுத்தமான பசும்பாலை பருகும் பழக்கத்தை நோக்கி பயணிக்க,சமூக அணுகுமுறைமாற்றம் இருக்கவேண்டும் என்பது எனது எண்ணமாகும்.

“மகிந்தசிந்தனை” - எதிர்கால தொலைநோக்கு - 2010





அமைச்சரின் செய்தி

# அமைச்சரின் செய்தி

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபை எனது அமைச்சின் கண்காணிப்பின் கீழ் செயல்படத் தொடங்கியதிலிருந்து அதன் முன்னேற்றம்,மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.
“மகிந்தசிந்தனை“பிரகடனஅடிப்படையில் அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களைபணிப்பாளர் சபையினர் அதன் நடவடிக்கைகளினைமுறையாகக் திட்டமிட்டுகொண்டுசெல்கின்றமைஎன்னைஆழமாககவர்ந்துள்ளது.
தேசியகால்நடைவளஅபிவிருத்திசபையின் பிரதானநோக்கம்,கால்நடைதொழிலினைஅபிவிருத்திசெய்வதாகவே இருந்துவந்தது.
இந்தஅறிக்கையில் விரிவாக கூறப்பட்ட,அர்த்தமுள்ளநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
தேசியகால்நடைவளஅபிவிருத்திசபையானதுகால்நடைவிவசாயிகளுக்குநியாயவிலையில் தரமான,உயர்தர இனவிருத்திபொருட்களைவழங்கிஇகால்நடைவிவசாயசமூகவலைப்பின்னல் ஒன்றினைவெற்றிகரமாகஉருவாக்கமுனைப்புடன் உள்ளது.
தேசியவர்த்தகசம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்கானவர்த்தகவிருதினைகால்நடைமற்றும் மீன்பிடித்துறையின் வெற்றிகொண்டமைக்குஎனதுமனமார்ந்தவாழ்த்துக்கள்.
இந்தவிருது,எதிர்வரும் காலங்களில் நல்ல பயனை பெறுவதற்குஊழியர்கள் மத்தியில் உந்துசக்தியை ஏற்படுத்தும் என்பது எனதுநம்பிக்கை.
தேசியகால்நடைவளஅபிவிருத்த ிசபையினை இலாபம் ஈட்டும் அரசநிறுவனமாக இட்டுச்செல்வதற்கு வழிவகுத்து உதவியதலைமைக் காரியாலயம் மற்றும் பிராந்தியஅலுவலகங்களைசார்ந்த,பணிப்பாளர் சபையினருக்கும்,ஊழியர்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

**ஆறுமுகம் தொண்டமான்**

பாராளுமன்றஉறுப்பினர்
கால்நடைமற்றும்
கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர்.



பிரதி அமைச்சரின் செய்தி

## பிரதி அமைச்சரின் செய்தி

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் இன்றியமையாத ஒரு அமைப்பாகும். இச்சபையானது, கிராமிய துறை விவசாய சமூகத்துடன் நெருங்கி செயலாற்றி இலாபகரமாக இயங்கும் அத்தியாவசிய நிறுவனமாக இயங்குவதற்கு தனது முழுசக்தியையும் பிரயோகித்து அவர்களுக்கு உதவியுளள்து.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் இன்றியமையாத ஒரு அமைப்பாகும். இச்சபையானது, கிராமிய துறை விவசாய சமூகத்துடன் நெருங்கி தனது முழுசக்தியையும் பிரயோகித்து இலாபகரமாக இயங்கும் அத்தியாவசிய நிறுவனமாக செயலாற்ற தனது முக்கிய கடமையாக கொண்டுள்ளது.

கடந்த வருடங்களில் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை நுகர்வோர் சார்பாக சேவையை மேம்படுத்துவதில் தனது கவனத்தை திருப்பியுள்ளது. கவர்ச்சிகரமான விற்பனை நிலையங்களில் நுகர்வோர் நியாயமான விலையில் அவர்களது தினசரி தேவையை பூர்த்தி செய்ய அச்சபை வழிவகுக்கிறது.

நுகர்வோர்களின் வசதி கருதி தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை தனது உற்பத்திகளை சில்லறை விலையில் விற்பனை நிலையங்களூடாக பெற்றுக் கொள்ள ஏற்பாடும் செய்துகொடுத்துள்ளது. உற்பத்திகளின் தரத்தை குறிப்பிடக்கூடியளவு பெருக்குவதே சபையின் பிரயத்தனமாகும் உயர்தர இனப்பெருக்க பொருட்கள் ஆடு, மாடுகள் இறக்குமதி மற்றும் விநியோகம் ஆகிய நடவடக்கைகளின் மூலம் பண்ணையாளர்களுக்கு நல்ல உற்பத்தியினை பெற்று கொடுத்து. அதன்மூலம் அவர்களது வருமானத்தை பெருகுவதற்கு உதவி வழங்கியுள்ளது.

நட்டத்தில் இயங்குவதையும் இலாபகரமாக்கும் பயன்தரும் நிறுவனத்தின் திறமைமிக்க முகாமைத்துவ பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்களின் திறமை, அர்ப்பணிப்பு சேவைக்கு அவர்களை வாழ்த்துகின்றோம்.

**என்.ஆர்.மைத்திரிபால** -பாராளுமன்ற உறுப்பினர்

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக
அபிவிருத்தி பிரதி அமைச்சர்

## தொலைநோக்கு

எமதுமக்களின்
சமூக,பொருளாதாரநிலைமைகளைமேம்படச்
செய்யவெனதரமான
இனப்பெருக்கசாதனங்கள்,கால்நடைமற்றும்
விவசாயப் பொருட்களைஉற்பத்திசெய்யும்
இலங்கையில் சிறந்தசுயபூர்த்தியுள்ளஅமைப்பாகச்
செயற்படுவதாகும்.

# குறிக்கோள்

பலதரப்பட்டவிவசாயமற்றும் சுற்றுப்புறச் சூழல் வலயங்களில்,மனநிறைவுடனானதொழிலாளர்களைஈடுபடுத்தி,கால்நடைமற்றும் பயிர்ச்செய்கைஒன்றிணைந்தபண்ணைகளைநடத்துதல்.

கால்நடைமற்றும் பாற்பண்ணைப்பொருட்கள் சம்பந்தமாக சுய பூர்த்தியுள்ளநாடாக இலங்கையைஆக்கவென, இனவிருத்திவிலங்குகளைதொடர்ச்சியாகவிவசாயிகளுக்குவழங்கும் நோக்கில் நியாயமானகாலப்பகுதிக்குள் கால்நடைஅபிவிருத்திநடவடிக்கைகளைமேற்கொள்ளுதல்.

சபையின் உற்பத்தியையும், இலாபமீட்டும் தன்மையையும் அதிகரிக்கவெனபுதியதொழில்நுட்பத்தை உபயோகித்து,கால்நடைமற்றும் விவசாயஉற்பத்திகளைஅதிகரித்தல்.

நாட்டின் பணப் பயிர் உற்பத்திக்குஉதவும் வகையில்,தெரிவுசெய்யப்பட்டபண்ணைகளில் பணப்பயிர்ச்செய்கையைமேற்கொள்ளல்.

கால்நடைமற்றும் பயிர்ச்செய்கைகளில் இருந்துஉச்சகட்டஉற்பத்தியைபெறுதல்.

கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை இணைந்தபண்ணைவழிமுறைகள் மூலம் உச்சகட்டஉற்பத்தியைபெறுதலும்,புவியியல் நன்மையைஅடிப்படையாகக்கொண்டபயிர்ச்செய்கைவழிமுறைகளைக் கடைப்பிடித்தலும்.



## பொது இலக்கு

- தெங்குபொருட்களைஅடிப்படையாகக்கொண்டகைத்தொழில்கள் மூலம் கிடைக்கும் மேலதிக நிதியை உபயோகித்துசகல பண்ணை நடவடிக்கைகளையும் உச்சக்கட்டத்தில் பேணுதல்.

- சந்தை நடவடிக்கைகளில் வெற்றிகரமாகப் போட்டியிடவென,புதிய தொழில்நுட்பம்,நிபுணத்துவம், மூலதனம் சிறந்தமுகாமைத்துவ நடவடிக்கைகள் என்பன அறிமுகம் செய்யப்படும் அதேசமயத்தில்,செலவீனத்தைக் குறைத்தலும்,உற்பத்தியைஅதிகரித்தலும்.

- தனியார் தொழில்துறையின் பங்களிப்புடன் இந்தவிவசாயப் பண்ணைப் பிரிவுகளை, இலாபம் தரும் வர்த்தக அமைப்புகளாகமாற்றவென சிறந்த சந்தைப்படுத்தல் வழிமுறைகளுடன் கூடியபுதியசந்தைகளுக்குள் பிரவேசிப்பதற்கான சாத்தியங்களைஆராய்தல்.

# முக்கியநட வடிக்கைகள்

- கால் நடைகளைவளர்த்து இனவிருத்திசெய்தல்.
- நியாயவிலையில் விவசாயிகளுக்குதரமான இனவிருத்திப் பொருட்களைவழங்குதல்.
- உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவெனதென்னந்தோட்டங்களை சிறந்தமுறையில் பராமரித்தல்.
- பொருத்தமான பண்ணைகளில் கால்நடைபயிர்ச்செய்கைஒன்றிணைந்த பண்ணை வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
- முக்கியமாக சிறியஅளவிலான கால்நடை பண்ணையாளருக்கும், பொதுவாக விவசாயிகள்,மாணவர்கள்,விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளஅதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சியும்,செய்முறைவிளக்கமும் வழங்குதல்.
- உச்சகட்ட இலாபத்தைப் பெறவெனபண்ணைப்பொருட்களைஉபயோகித்துபெறுமதிமிக்கபொருட்களைஉற்பத்திசெய்தல்.
- மக்கள் மத்தியில் பால் பருகும் பழக்கத்தைப் பிரபல்யப்படுத்தும் வகையில் சுத்தமானபசும்பாலைவிற்பனைசெய்தல்.

## கூட்டுத் தகவல்கள்

பெயர்.∴அந்தஸ்து
தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபையானது
ஒரு அரச கூட்டுத்தாபனம் ஆகும். இது
கால்நடைமற்றும் கிராமியசமூகஅபிவிருத்தி
அமைச்சின் கீழ இயங்குகின்றது.

உருவாக்கம்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 1973
ஆம் ஆண்டு விவசாய கூட்டுத்தாபனங்கள்
சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அதன்
வெளிக்களநடவடிக்கைகள் 1974 ஆம் ஆண்டு
ஆரம்பிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபை

திரு. ஆர்.எம்.பி.எல்லேகல
(தலைவர்)
திரு.லக்ஸ்மன் குலுகல்லே (பிரதித்தலைவர்)
திரு.ஏ.ஆர்.அனுரஜயசிரி
திரு.கே.எம்.எம்.சிறிவர்த்தன
திரு.டாக்டர் சம்சன் எல்.ஏ.டானியல்
திரு.எஸ்.மர்வின் டபிள்யூ பெரேரா
திரு.எஸ்.பாலசந்திரன்
திரு.ரவீந்திர மனோஜ் கமகே
திரு.ஆர்.அசோக்குமார்
திரு.டாக்டர் பிரேமகுமாரத சில்வா

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
ஏ.வி.எச்.முனவீர
பொது முகாமையாளர்

தலைமை அலுவலகம்
இல : 40 நாவல வீதி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05
தொலைபேசி : +94 11 2501701/2
பக்ஸ் : +94112502695
இமேயில் : infor@nldb.gov.lk
இணையத்தளம் : http://www.nldb.gov.

வங்கியாளார்
மக்கள் வங்கி

# பணிப்பாளர் சபை



திரு. ஆர்.எம்.பி.எல்லேகல
(தலைவர்)



திரு.லக்ஸ்மன் குலுகல்லே
(பிரதித்தலைவர்)



திரு.ஏ.ஆர்.அனுரஜயசிரி



திரு.கே.எம்.எம்.சிறிவர்த்தன



டாக்டர் சம்சன் எல்.ஏ.டான்யல்



திரு.எஸ்.மர்வின் டபிள்யூ பெரேரா



திரு.எஸ்.பாலசந்திரன்



திரு.ரவீந்திர மனோஜ் கமகே



திரு.ஆர்.அசோக்குமார்



டாக்டர் பிறேமகுமாரத சில்வா



## முகாமைத்துவஅணியினர்

திருமதி. எஸ் ஏ எஸ்தெவரப்பெரும
நிர்வாகமுகாமையாளர்

எம் டிகருணாதிலக
முகாமையாளர் (கண்காணிப்புமற்றும் மதிப்பீடு)

கேகேஆர் கன்னங்கர
உதவிப் பொதுமுகாமையாளர் (மனிதவளங்கள் மற்றும்நிர்வாகம்)

டிமெதகெதர
பணிப்பாளர் நாயகம் (நிறுவனசெயற்பாடுகள்)

ஏ சிஎச் முணவீர
பொதுமுகாமையாளர்

என் பீ டி ஏக்கநாயக்க
உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)

எம் பத்மசிரி
உதவிமுகாமையாளர் (நிதி)

எம் ராஜகருணா
முகாமையாளர் (நிதி)




தலைமைக் காரியாலயம் மற்றும் விநியோகவிற்பனைநிலையம்



## தலைவரின் அறிக்கை

இலங்கையின் இன்றியமையாத கைத்தொழில் துறையை உயர்த்துவதற்கு கடந்த நான்கு தசாப்தங்களாக தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை மிக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி ,நாட்டின் கால்நடை வள தொழிலில் ஒரு சாதனையை பதித்துள்ளது. இது ஒரு அரச ஸ்தாபனம் ஒன்றின் நம்பகரமானதும் பாரதுரரதுமான செயற்பாடாகும்.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய பங்காளியாக விளங்கும் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையானது தனது செயற்பாடுகளில் அதிக கவனத்தினை கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு முதன்மை அளிக்கும் வகையில் பால் பண்ணை மற்றும் கால்நடை வளர்ப்பு தொழிலினை அறிமுகம் செய்தது. இலாபத்தினையே முக்கிய நோக்கமாக கொண்டு உழைக்கும் வியாபாரத்தினை விட கிராமிய விவசாயிகளுக்கு அதிகமாக உதவுவதே எமது குறிக்கோளாக இருந்து வந்தது. ஆயினும், இவ்வருட மதிப்புரையின் கீழ ரூபா 200 மில்லியனுக்கு அதிகமான லாபத்தினை பெற்று சாதனையையும் நிலை நாட்டியுள்ளோம்.

தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சிறந்த வர்த்தக விருது அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து நாம் அதி திருப்தியடைந்தோம். அத்துடன் எமக்கு மீன்பிடித்துறை மற்றும் கால்நடை தொழிலுக்கு “மெறிட்” விருது கிடைத்தது.

முதல் முறையாக தேசிய விருது கால்நடை தொழிலுக்கு வழங்கப்பட்டமை, அது எமது எதிர்கால முயற்சிக்கு உற்சாகத்தை அளிப்பதோடு, ஊழியர்கள் தமது அதிகூடிய இலக்குகளை அடைவதற்கு ஒரு உந்து சக்தியாக இருப்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்துடன் முன்பை விட நாம் கடுமையாக உழைத்து எமது நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்வதோடு மேலும் திறமான விருதுகளை பெறுவதற்கு முனைவோம். 2011 ஆம் ஆண்டுக்கான விருதினை வெற்றி கொள்வதற்கு பங்களிப்பு செய்த எமது ஊழியர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இவ்வருட ஆரம்ப பகுதியில் அவுஸ்திரேலியாவில் இருந்து முதலாவது தொகுதி பசுக்கன்றுகள் வரவழைக்கப்பட்டமையினால் பாரியதொரு முன்னேற்றம் காணப்பட்டது. இவ் இறக்குமதியினை மேற்கொள்வதற்கு முக்கிய நோக்கம், பால் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், உயர்தர சிறந்த பாலை சுரக்கக்கூடிய கால்நடைகளுக்கு உரிமையாளர்களாக விவசாயிகள் இருப்பதற்கு சாத்தியம் அளிப்பதற்கும் அவர்களின் வருமானத்தினை உயர்த்தி கொள்வதற்குமேயாகும். மேற்படி இவ் நடவடிக்கை கிராமிய விவசாயிகள் பாரியளவில் பால்பண்ணைகளை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்புக்கும். இதுதான் சரியான பாதை எனலாம்.

எமது உற்பத்தியினை விருத்தி செய்வதற்கு தரம் மட்டும் முக்கியமானதன்று. அவை நுகர்வோரையும் கவரக்கூடியதாக இருத்தலே எமது தேவையாகும். நுகர்வோரின மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த தனியார் துறையினர் தமது வேகமான புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தி, கவர்ச்சிகரமான பொதி செய்தலினையும், தரமான விளம்பரங்களையும் ஏற்படுத்துவதால் சந்தையில் கட்டாயமான போட்டி நிலவுகிறது.

உற்பத்தி விநியோகத்தினை விருத்தி செய்வதற்கு கவரக்கூடிய பால் விற்பனை நிலையங்களை அமைத்துக் கொடுத்துள்ளோம். இன்றைய போக்கிற்கு அமைவாக “டிலைட்” (னுநடவைந) என்ற அடையாள பெயரின் கீழ் சந்தைப்படுத்துகிற “டெற்றா்” அளவில் பால் பக்கட் (வுநவசய ீயநம) அறிமுகப்பட்டுள்ளது.
நல்ல சௌகரியமான சூழலில் தரமான உற்பத்தி கொண்ட பாலினை எமது விற்பனை நிலையங்கள் ஊடாக வழங்கும் போது நுகர்வோர் எமது முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவிக்கின்றனர். தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு அருகே அமைக்கப்பட்டுள்ள இரண்டு பால் விற்பனை நிலையங்களுக்கு முழுமையான ஆதரவு கிடைக்கப்பெற்றதால் அவர்களின் வருமானம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எமது முதலீடுகள் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பண்ணையை நவீனப்படுத்துவதற்கு, விலங்குகளுக்கு அதி உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கு, நிறுவனத்திற்கு சொந்தமான விடுதிகளை சீரமைத்தல் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டன. ஆனால் தற்போது இவை இலாபத்தை தரக்கூடிய பயனை தர ஆரம்பித்துள்ளன. சபையின் முன்னேற்றத்திற்கென விசுவாசமாக, அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கியமைக்கென தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் பலதரப்பட்ட மட்டங்களிலுமுள்ள சகல ஊழியர்களுக்கும் சபை அதன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

எமது சபையின் நடவடிக்கைகளை சுபீட்சத்தை நோக்கி வழிநடத்துவதற்கு பொருத்தமான ஊக்கத்தையும், வழிகாட்டல்களையும் வழங்கியமைக்காக கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொண்டமான், கால்நடை வள அபிருத்தி பிரதியமைச்சர் கௌரவ எச்.ஆர்.மித்ரபால மற்றும் பிரதி அமைச்சின் செயலாளர், உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் முகாமைத்துவ குழு ஆகியோரின் ஆர்வம், ஒத்துழைப்பு இல்லாதிருந்தால் எனக்கு இந்த சபையின் நோக்கத்தினையும், சாதனையினையும் நிறைவேற்றக் கூடியதாக இருந்திருக்காது. விசுவாசமான, அர்ப்பணித்த சேவையை பொறுப்புடன் நிறைவேற்ற உந்து சக்தியாக இருந்த சபை ஊழியர்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றி!

திரு. ஆர்.எம்.பி.எல்லேகல



## பிரதி தலைவரின் அறிக்கை

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் புதிய பணிப்பாளர் சபை பொறுப்பை ஏற்றுக்கொண்டதில் இருந்து மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் திருப்திகரமான அனுபவத்தை காணக்கூடியதாக இருந்ததுடன், இலாபம் மற்றும் செயற்பாடு இரண்டிலும் எமக்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை சாதிக்க கூடியதாக இருந்தது.

இலங்கை பொருளாதாரத்தில் இன்றியமையாத கால்நடை வள துறையினை விருத்தி செய்து கிராமிய விவசாய சமூகத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை இன்று பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கிராமிய விவசாயிகளுக்கு உயர்தர இனவிருத்திக்கான கால்நடைகளினை நியாயமான விலையில் நாம் வழங்குகின்றோம். அத்துடன், பயன்படும் வகையில் பயிற்சி வசதிகளும் வழங்குகின்றோம். திறமையான முறையில் நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு சகல ஆதரவும் வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை துறையை விருத்தி செய்வதற்கு உலக போக்குடன் இணைந்த நவீன முறையிலான தொழில் நுட்பங்களை பாவிக்கும் திட்டமிட்ட நிகழ்வினை மேற்கொள்கின்றோம். அதற்கு ஒரு உதாரணம்:

பால் சுரக்கும் இயந்திரத்தை பாவித்து ஒவ்வொரு பசுவும் எந்தளவில் செயல்பட்டது என்பதையும், பால் உற்பத்தியில் பின்பற்றக்கூடிய செயற்பாடுகளையும், குறிப்பிட்ட பசு எதிர்பார்த்த செயற்பாட்டினை செய்யவில்லை என்பதற்கான காரணத்தை அறிந்துள்வதற்கு சரியான பதிவு குறிப்புகளை பயன்படுத்தலாம்.

தெளிவான வேலைத்திறன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள நாம் தொடர்ந்து அவர்களுக்கு வசதிகளை இலகுவாக்கி கொடுத்துள்ளோம். காப்புறுதித் திட்டங்கள் மீள பெற்றுக்கொள்ளப்படும். உள்ளக, வெளியக வைத்திய செலவுகளை சமூக நிகழ்வுகள் விளையாட்டுக்கள் அவர்களை உற்சாகத்துடன் இருப்பதற்கு தூண்டுதலாக இருந்தன. சமய நிகழ்வுகள், பண்டிகை கொண்டாட்டங்கள் அதுபோன்று விளையாட்டு நிகழ்வுகளும் அவர்களது ஆர்வத்தினையும், ஊக்கத்தினையும் வெளிப்படுத்தும்.

கால்நடைவள கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு செயல்திறன் பங்காளராக உள்ளோம். அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசுக்கள் தற்போது மெனிக் பாம் பண்ணையில் வளர்க்கப்படுவதோடு தினசரி பால் உற்பத்தியில் 8000 லீட்டர் வரை பதியப்பட்டு மிக கணிசமான பெறுபேறுகளை காட்டி நிற்கின்றது. அண்மையில் எண்ணிக்கையளவில் 1000 - 1200 லீட்டர் வரையே இருந்தது.

சுத்தமான பால் பருகுவோரை ஊக்கமூட்டி பாவனைப்பொருட்களை பிரபல்யபடுத்துவதன் பயனாக மேலும் மேலும் பாவனையாளர்கள் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்களில் எமது உற்பத்திகளை விரும்பி அனுபவிப்பதை உற்சாகப்படுத்துவதே எமது பிரயத்தனமாகும். மேலும் இச்சபையின் உற்பத்திகள் சந்தையை வந்தடைகின்றன. இதனால் எமது பண்ணையில் மேலும் பல உற்பத்திகளை அறிமுகப்படுத்தி அளிக்கும் திட்டங்கள் உள்ளன.

மகிந்த சிந்தனையில் கூறப்பட்ட பிரகடனம் எமக்கு வழிகாட்டியாக உள்ளது. உண்மையான தலைமைத்துவத்தை அளித்து கால்நடை வள அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொண்டமான் அவர்களை வெகுவாகப் பாராட்டுகின்றோம்.

தலைவர் ரஞ்சித் எல்லேகல அவர்கள் திறமைமிக்க ஒரு குழுவினரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவர்கள் ஆகியோரை பூரண ஒத்துழைப்பினூடாக வழிநடத்துகின்றார்.

தலைவர் ரஞ்சித் எல்லேகல அவர்கள் திறமைமிக்க ஒரு குழுவினரை, பணிப்பாளர் சபை அங்கத்தவர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பினூடாக வழி நடத்துகின்றார். தலைமைக் காரியாலயம் மற்றும் வெளிநிலை காரியாலயங்களில் உள்ள ஊழியர்களின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் ஆண்டுகளில் முன்னைவிட நல்ல பயனை அடைய அயராது உழைப்போம்.

லக்ஸ்மன் குலுகல்லே

# மீளாய்வு நடவடிக்கைகள்

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கம், கால்நடை துறையினை அபிவிருத்தி செய்வதே ஆகும். மேற்படி இந்த நோக்கத்தினை அடைவதற்கு இச்சபை கால்நடை பண்ணைத் தொழிலில் ஈடுபடும் சமூகங்களுக்கு இயலுமானவரையிலான சிறந்த சேவையை வழங்க அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கின்றது.





## இனப்பெருக்கல் விருத்தி

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பால் பண்ணை அபிவிருத்தி திட்டம் இனப்பெருக்களை விருத்தி செய்வதற்கு தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை திட்டமிட்ட நிகழ்ச்சிகளினை அமுல் படுத்துவதற்கு முக்கிய பங்கினை செய்துவருகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ணைகளில் மிகச்சிறந்த பசுக்கள் பாதுகாக்கப்பட்டு, அவற்றின் தூய ஜீவ அணுக்கள் சேகரித்து பாதுகாக்கப்பட்டன. இவற்றில் ஜேர்ஸி, பிரிஸியன், சஹிலால், கிலரி மற்றும் நில்லி ரவி இனங்கள் ஆகியவை அடங்குகின்றன. இதனால் நாட்டில் உள்ள பண்ணைகளுக்கு கலப்பு இன கால்நடைகளை வழங்குவதற்கு சாத்தியம் ஏற்படுகின்றது.

பசுமாடுகள், பன்றி, ஆடு மற்றும் கோழி போன்ற பலதரப்பட்ட இனங்களின் அதிகரிப்பு பண்ணையாளர்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு உதவியாக இருந்துள்ளது. இதன் மூலம் இலாபம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்கான பிரதிபலன் ஏற்பட்டமைக்குக் காரணம் தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை இனப்பெருக்கத்திற்கு அதிகளவிலான கேள்வியினை ஏற்படுத்தியமை.

தரமான இனவிருத்தி பொருட்களை விநியோகம் செய்வது தனிநபர் கால்நடை பண்ணையாளர்களுக்கு மாத்திரமல்லாமல் மேலதிகமாக கால்நடை உற்பத்தி சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் திவிநெகும, சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அரசாங்கம் தனியார் திட்டங்களுக்கும் இவை வழங்கப்படுகின்றன.

நியாயமான விலையில் பசுமாடுகள், எருமைகள், ஆடு, செம்மறி ஆடு, பன்றி, முயல், பறவைகள் பரந்தளவில் வழங்கப்படுகின்றன.

முதன்முறையாக அவுஸ்திரேலியாவிலிருந்து 2012 - 2014 வரை மூன்று ஆண்டு காலப்பகுதியில் முதலாவது தொகுதியாக 4500 பசுமாடுகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதற்காக உள்ளக்கட்டமைப்பு வசதிகள் கொண்ட பண்ணை மணிக்பாலகமவில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் உயர்தர இனவிருத்தி உற்பத்தி கொண்ட பிரீஸியன், ஜேர்ஸி மற்றும் கலப்பு இனம்கொண்ட ஜேர்ஸி பிரீஸன் கருதரித்த 500 பசுக்கன்றுகள் கொண்டு வருவதற்கும் ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## கோழிவளர்ப்பு



விலைஉயர்ந்தமுட்டைகளின் விலையினைஎளிதாக்கும் ஒருநடவடிக்கையாக "திவிநெகும" கிராமியமேம்பாட்டுதிட்டம் கால்நடைகிராமியசமூகஅபிவிருத்தி,பொருளாதாரஅபிவிருத்திஅமைச்சின் நேரடிகண்காணிப்பின் கீழ் சபை, 2010 ஆம் ஆண்டில் இருந்துஒருநாள் குஞ்சுகளினைதொடர்ந்து இறக்குமதிசெய்யஆரம்பித்துள்ளது.

2011 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 73 ஆயிரம் குஞ்சுகள் மாறவிலபண்ணையில் இருந்துவழங்கப்பட்டது. "திவிநெகும" இரண்டாவதுகட்டதிட்டத்தின் கீழ் ஒருமாதகுஞ்சுகள் பல்வேறுமாகாணசபைகளுக்குவழங்கப்பட்டன.

இதற்கிடையில் மாறவிலபண்ணைகளில் உள்ளகாப்பகங்களில் இவ் முக்கியநிகழ்வாககோழி குஞ்சு உற்பத்திதிறன் 400, 000 குஞ்சுகளிலிருந்து 800, 000 குஞ்சுகள் வரைஅதிகரித்துள்ளன.

## செயற்கை இனப்பெருக்கம



விந்துக்களை இறக்குமதி செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட திட்டத்துடன் பெண் பிறப்புறுப்பகளினை அதிகரிப்பதற்கான நோக்கம் ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் வெற்றி கண்டுள்ளது.

200 மருந்துதுளிகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதுடன் அவை முழுமையாக கால்நடைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினர் அநேகமான பண்ணைகள் ஒழுங்கு முறையாக கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

தற்போது 89 விலங்குகள் கருவுற்று இருப்பதாக அண்மையில் வெளியான அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

திட்டமிட்ட நிகழ்வுகளினூடாக தற்போது 50 சத வீதத்தில் காணப்படுகின்ற பெண் பிறப்புக்கள் 93 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பால் உற்பத்தி அதிகரிப்பு



கடந்த சில வருடங்களாக பால் உற்பத்தி குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது. 2010 இல் 3.2 மில்லியன் லீற்றர் ஆக இருந்தபால் உற்பத்தி 2011 இல் 2.8 மில்லியன் லீற்றராக வீழ்ச்சியுற்றது. 2012 இல் ஆரம்ப பகுதியில் எதிர்பார்த்த இறக்குமதியின் எண்ணிக்கையின் அளவுகுறைந்தன. கால்நடைகள் பண்ணைகளில் இருந்துவேறு இடத்திற்குமாற்றப்பட்டு வேளாண்மையாளர்களுக்கு விற்கப்பட்டது.

சிறந்தஉயர்தர இனங்களின் வருகை 2012 இல் பால் உற்பத்தியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது 7 லீற்றருக்கும் குறைவாக உள்ளதை ஒப்பிடும்போதுபால் கொடுக்கும் பசுக்களின் சராசரிஉற்பத்தி நாளொன்றிற்குகுறைந்தது 20 லீற்றர் பால் அதிகரித்து இருத்தல் வேண்டுமெனமதிப்பிடப்படுகின்றது. இவ்வாறாக பால் உற்பத்தியின் வளர்ச்சி எதிர்வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படுகின்றது. கிட்டதட்ட ஒருநாளைக்கு 7000 லீற்றரால் பால் உற்பத்தி உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## பால் சுரக்கும் புதிய இயந்திரங்கள்

பால் சுரக்குவதற்காக புதியதொழில் நுட்பங்களையும் அதன் செயற்பாடுகளைஅறிமுகப்படுத்துவதில் சபை தொடர்ந்து முயற்சிகளைமேற்கொள்கின்றது.
துற்போது புதியபால் சுரக்கும் இயந்திரசாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. 2011 இல் இரண்டுபுதிய இயந்திரசாதனங்கள் போபதலாவ மற்றும் டயகமபண்ணைகளில் நிறுவப்பட்டன.

உயர் பயனுள்ள கால்நடைகள்
இறக்குமதி செய்யப்படுவதோடு உற்பத்தி சாதனங்களும் தரம் உயர்த்தப்படும். அவுஸ்திரேலியாவில் இருந்துதருவிக்கப்பட்ட புதிய இனங்களின் வருகையை இட்டு 2012 இல் புதிய இயந்திரசாதனங்கள் மெனிக் பாலமையில் நிறுவப்படும்.

## பசும்புல் விதைமற்றும் தீவனங்களின் இறக்குமதி

ஆய்வுக்குஉட்பட்டகாலப்பகுதியில் உயர் போஷாக்குஉள்ளமேய்ப்புல் மற்றும் தீவனங்கள் 5, 700 கிலோகிராமினை சபை இறக்குமதிசெய்துபண்ணைகளுக்கிடையேபகிர்ந்தளித்தது.

இது பண்ணைகளில் இருக்கின்றகுறைவாகமேய்ப்புல் போஷாக்குதன்மையினைவெற்றிகரமாகபோக்கியது. ப்ர்க்கஹிரா,டெரும்பனீஸ்,மொம்பஸகினிமற்றும் TD58 ரகபோன்றபலதரப்பட்டவிதைகள் 1026 ஏக்கரில் பயிரிடப்பட்டது. 2012 காலப்பகுதியில் இருந்துமிகுதியுள்ளவிதைகள் 600 ஏக்கரில் பயிரிடதிட்டமிடப்பட்டுள்ளது.

கந்த 5 வருடங்களாகபுற்தரைஅபிவிருத்தித் திட்டம் பண்ணைகளில் நிரந்தரஅதிகரிப்புநிலையில் இருந்தமைகுறிப்பிடத்தக்கது.

மேற்படி இந்தஅதிகரிப்பு 2007 இல் 273 ஏக்கராகவும், 2010 இல் 741 ஏக்கராகவும், 2011 1000க்கும் அதிகமானஏக்கராகவும் அதிகரிக்கப்பட்டமைவரவேற்கத்தக்கது.



## ஒன்றிணைந்த பண்ணைகள்

கால்நடை மற்றும் விளைச்சல் பயிர் செய்கையுடன் ஒன்றிணைந்த 30 பண்ணைகள் நாட்டில் பல பகுதிகளில் வியாபித்துள்ளது. பெரும்பான்மையான பண்ணைகளில் 15 தென்னை முக்கோணத்திலும் 8 பண்ணைகள் உலர்வளையத்திலும் உள்ளது. மிகுதியான நான்கு மலை நாட்டிலும், மூன்று மத்திய மலைநாட்டிலும் உள்ளது. அத்துடன் இன்றியமையாத பண்ணைகள் வளைப்பின்னலினையும் சபை நிர்வாகித்து வருகின்றது.

மீளாய்வின் போது தேங்காயை பிரதான பயிராக இணைந்த விவசாயத்தில் சபை தனது நிகழ்வுகளாக தொடர்கிறது.

2011 இல் வருடாந்த உற்பத்தி 20 மில்லியன் தொகையான தேங்காய்கள் பராமறிக்கப்பட்டது. 2010 இல் 20.6 மில்லியனில் இருந்து 19.94 மில்லியன் மிகக்குறைந்த வீச்சியைக் காட்டியது.

இருந்தபோதிலும் தேங்காய்கள் கணிசமான வருமானத்தினை தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு பெற்றுத்தருகின்றது.





## ஆய்வும்,அபிவிருத்தியும்

சபையின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அறிமுகநடவடிக்கைகளில் சிரிங்கபாத மற்றும் மார்டீன் பண்ணைகளில் தெங்குசெய்கை விளைச்சல் அதிகரிக்கசெய்ய திண்மம் மற்றும் திரவம் இரண்டிலும் பௌதீகபசளை பரிசோதனை செய்யப்பட்டது.

இந்நடவடிக்கை வெற்றியளித்தால் மண்ணின் அமைப்பிற்கு ஏற்பஅதிகரித்துச்செல்லும் விளைச்சலின் பயனாகஒவ்வொரு பண்ணையிலும் தேங்காயின் பருமன் அதிகரிக்கும்.

திரவபசளை பரிசோதனை யக்கலபிரிவில் அமைந்துள்ள சிரிங்கபாதயில் 2011 ஆம் ஆண்டுநவம்பர் மாதம் 72 ஏக்கரில் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு,மிககவனமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

## விவசாயிகளுக்கானபயிற்சித் திட்டம்

திகனவில் அமைந்துள்ள மத்திய நாட்டுகால்நடை அபிவிருத்தி மத்தியநிலையம் பல்வேறுபிரிவுகளில் உள்ள விவசாயிகளின் தேவைக்கேற்றவாறான பயிற்சித் திட்டங்களை நடாத்துகின்றது.

புண்ணைவேளாண்மை,சிறியஅளவிலான கால்நடைவளர்ப்புமுகாமைத்துவம்,பயிர் வேளாண்மை,கால்நடை,பயிர் இணைந்தவேளாண்மைமுறை,காளான் பயிர் செய்கை,பாலைபாதுகாத்தல் மற்றும் பயிர்ச் செய்கையை சேமித்தல் போன்றவை இந்தபயிற்சியில் இடம்பெற்றுள்ளது. ஆய்வுக்குட்பட்டகாலப்பகுதியில், 110 பயிற்சிநெறிகளில் 4 ஆயிரம் பேர் பங்குபற்றினர். (3945 விவசாயிகளுக்கு

பயிற்சிஅளிக்கப்படவேண்டும் என இலக்குநிர்ணயிக்கப்பட்டிருந்தது.)

தங்கிநின்றுபயிலும் பயிற்சித் திட்டங்களுக்குஅதிகளவிலானஆர்வம் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டு 21 பேர் தங்கிநின்று பயிலும் பயிற்சித் திட்டத்தில் 567 பேர் கலந்துகொண்டனர்.

அத்துடன் பயணச்செலவு,பயிற்சி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பால் பண்ணை, ஆடு,செம்மறி ஆடு மற்றும் கோழிவளர்ப்பு என்பன பயிற்சியில் உள்ளடக்கப்பட்ட பிரிவுகளில் அதிதியாகவரும் விரிவுரையாளர்கள்

தேங்குபயிர்ச்செய்கை மற்றும் தேனீவளர்ப்பு போன்றவிசேடதலைப்பினைவிருமபி ஏற்றுக்கொண்டுபேச முன்வருகின்றனர்.



## நுகர்வோருக்கான சேவை

தரமான பண்ணை உற்பத்திகளினை நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்க தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை அதீத முயற்சியை மேற்கொள்கின்றது. பல வருடங்களாக தரத்தில் மிக உயர்ந்தவற்றை பேணும்போது தனது பலதரப்பட்ட உற்பத்திகளை விஸ்தரித்துள்ளது. அத்துடன் நுகர்வோருக்கு சுத்தமான பால் பொருட்களை பெற்றுக்கொள்ளவும் சபை வழிவகுக்கின்றது.

சந்தையில் திடீரென தேங்காயின் சில்லறை விலை உயரும் போது எமது பண்ணைகளில் பெற்றுக் கொள்ளக்கூடிய தேங்காயின் விலையினை நியாயமான விலையில் பேணல். இந்த சேவையினை நுகர்வோர் பாராட்டியும் உள்ளனர்.



நுகர்வோர் நேரம் கிடைக்கும்போது நடந்து வந்து சுத்தமான பசும்பாலை சௌகரியத்துடன் அருந்துவதற்கும், கொள்வனவு செய்வதற்கும் சகல வசதிகளையும் கொண்ட பால் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

## சுத்தமான பசும்பாலை பிரபல்யப்படுத்தல்

ஆறிமுகப்படுத்தப்பட்ட டெட்ராபெக் “டிலைட்” என்னும் வியாபாரப் பெயருடன் சந்தைப்படுத்தப்படுகின்ற எமது உற்பத்தி மிகசாதுர்யமான நுகர்வோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிய சந்தையை உருவாக்குகின்றது.




மக்களால் விரும்பப்படுகின்ற சுத்தமான பால் பாவனை ஆற்றல் மிக்க சந்தைப்படுத்தலின் ஒரு பாகமாக உள்ளது. கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களிலும் 60 வியாபாரநிலையங்கள் இந்த ஸ்தாபனம் பெரியளவில் உள்ளடங்கியுள்ளது.

சந்தைகள் மற்றும் இரயில் நிலையங்கள் போன்ற மக்கள் கூடுமிடங்கள், அரச வைத்தியசாலைகள்,பாடசாலைகள்,பல்கலைக்கழகங்கள் போன்றவற்றை இவ் ஸ்தாபனம் இணைத்துள்ளது. தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை வெளிநிலையங்கள் இந்த பண்ணைகள் மேற்படி சேவையைஅளிக்கின்றது.




## சமூகதொடர்பாடல்

மீள் ஆய்வின ்போது,குறிப்பாக தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபை பண்ணைகள் இயங்கும் இடங்களில் பொதுமக்களுடன் மனப்பூர்வமானஉறவை தொடர்ந்து ஆதரிக்கமுயல்கிறது.

பொதுமக்கள் தொடர்பாடல் நிகழ்ச்சியின் ஒருபகுதியாக தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபை நாட்டின் பல்வேறு பகுதிகளில் வருடாந்தம் நடைபெறும் தேசிய அபிவிருத்திகண்காட்சியான “தெயடகிருள” வில் பங்குகொண்டு குண்காட்சிகளை ஒழுங்குசெய்து,மக்கள் அதன் செயற்பாடுகளைஅறிந்துகொள்ள ஒருவாய்ப்பைவழங்குகின்றது.



கிராமியகுடும்பங்களின் வாழ்க்கை வருமானத்தினை உயர்த்துவதற்கானஅரசநிகழ்ச்சியான “திவிநெகும”யில்ஒருசெயன் திறன் கொண்டபங்காளியாக தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபை விளங்குகிறது.

பழங்கள்,மரக்கறி வகைகள்,கோழிவளர்ப்புமற்றும் கால்நடைவளர்ப்புஉள்ளிட்ட வீட்டுத் தோட்ட நிர்மாணிப்புக்கும்தேசியகால்நடைவளஅபிவிருத்தி சபை உதவுகிறது.

கண்காட்சியகங்களில் நிர்மாணிக்கப்பட்ட பூரண மாதிரிபண்ணை மூலமாக சமூகத்திற்குஅதன் பயன்பாடு பற்றியவிழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.மேலும் பலவிவசாயபயிர்கள் மற்றும் பாற் பொருட்கள் என்பன காட்சிக்குவைக்கப்பட்டுஎடுத்துக்காட்டான விவசாயகுடும்பத்தின் வாழ்க்கைபாங்கு “தெமிகெதர” மூலம் திட்டமிடப்படுகின்றது.



கடந்த 2011 ஆண்டு ஜூலைமாதம் பண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டுமண்டபத்தில் கால்நடை மற்றும் கிராமியஅபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சர்வதேசகால்நடைமற்றும் கோழிப்பண்ணை கண்காட்ச்சியானது தேசியகால்நடைவளஅபிவிருத்திசபையின் செயற்பாடுகளினை நேரடியாகஅறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தமையினால் பெருந்திரளான மக்களை கவர்ந்தது.

ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஸ அவர்கள் தேசிய கால்நடைவள அபிவிருத்திசபையின் செயற்பாடுகளில் தீவிரஅக்கறைகாட்டி அதனைபார்வையிடுவதற்கு சிறிதுநேரத்தை கழித்தார்.
அவ்வாறே,பொருளாதாரஅபிவிருத்திஅமைச்சர் பசில் ராஜபக்ஸ அவர்களும்,அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் இணைந்து “தெமிகெதர” வில் தேநீர் அருந்தினார்கள்.







Parliamentary Series No. 119
Of
The Seventh Parliament of
The Democratic Socialist Republic of Sri Lanka
(First Session)

First Report

From
The Committee on Public Enterprises

Presented by
Hon. DEW. Gunasekara
Chairman of the Committee
On 01st of December, 2011

REPORT FROM THE COMMITTEE ON PUBLIC ENTERPRISES OF THE PARLIAMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

| Date/Name of the Institution and Ministry | Major Issues/Problems Discussed | Comments by the Sub Committee & Decisions |
| --- | --- | --- |
| October 17th 2011 National Livestock Development Board (Ministry of Livestock & Rural Community Development) | 1. Annual Reports for the years 2008 & 2009 had not been tabled. | 1. To take action to table a outstanding Annual Report in Parliament |
| | 2. Out of the 32 farms, 15 farms had incurred a loss of Rs.80,861,214/- | 2. Most of the farms incurred losses are in the dry zone areas. Directed to take action to make them profitable. |
| | 3. Trade debtor balance up to 2010 had been Rs. 15 million | 3. It has been revealed that Rs. 9 million debtor balances have to be recovered including the bad debts. Directed to write off the balances which could not be traced after taking necessary approval. |
| | 4. Enquired the position on the shortage of feed & cash amounting to Rs. 900,000/- | 4. This fraud had taken place over a period of time & NLDB had handed over this matter to the Legal Authorities. |
| | 5. Dishonored cheques amounted to Rs. 02 million | 5. Matter has been handed over to the CID. |
| | | 6. The Committee appreciated the high standards maintained by the new Management, although there had been lapses in the past. |

6. The Committee appreciated the high standards maintained by the new Management, although there had been lapses in the past.

Accolades

## கௌரவவிருது

சபையின் உயர்தரமான நிர்வாகத்திற்கு
பொது வர்த்தகத்திற்கான
பாராளுமன்ற குழு பாராட்டியது.

2011 டிசம்பர் மாதம் 1ஆம்
திகதி தேசியகால் நடைவளஅபிவிருத்தி சபை நிர்வாகம்
பாராளுமன்றத்தில்
சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு பொதுவர்த்தகத்திற்கான
பாராளுமன்ற குழு புகழ்மாலை சூட்டியது.

போது வர்த்தகத்திற்கானபாராளுமன்ற குழுவானது புதிய
நிர்வாகத்தினரின் உயர்தரமான நிர்வாகத்தை பாராட்டியது.
ஆயினும் கடந்த காலங்களில் சிறுதவறுகள்
காணப்பட்டதாக அக்குழுவின் அறிக்கையில்
குறிப்பிடப்பட்டிருந்தது.

தேசிய கால்நடைவளஅபிவிருத்தி சபையின் நிர்வாகம்
மாறியதை அடுத்து 2010 மே மாதம் புதியபணிப்பாளர்
சபை நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது.




## வர்த்தக சிறப்புவிருது 2011

தேசிய வர்த்தகசம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட
2011 ஆம் ஆண்டுக்கான தேசியவர்த்தக விருதில்
கால்நடைவளஅபிவிருத்தி சபையின் மீன்பிடிதுறைக்கும்
கால்நடைவளதுறைக்கும் மெரிட் விருதுவழங்கப்பட்டது.

இவ்விருதினைதலைவர் ரஞ்ஜித் எல்லேகலஅவர்கள்
விருதுவழங்கள் வைபவத்தில் பெற்றுக்கொண்டார்.




## ஓய்வு விடுதிகள்

நுகர வாழ்க்கையில் இருந்து மீண்டு ஓய்வுபெற
விடுமுறை கழிப்பவர்களுக்கு நன்மையளிக்கும் முகமாக
ஆறு ஓய்வுவீடுகள் தேசியகால் நடைஅபிவிருத்தி
சபையினால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றன.
இவ்விடுதிகளில் அநேகமானவை அண்மையில்
புதுப்பிக்கப்பட்டவையாகும்.

மேற்படி இவ் ஓய்வுவிடுதிகள்
தேசியகால்நடைஅபிவிருத்திசபையின் பண்ணைகளுடன்
இணைக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்விடுதிகள் யாவும்
விடுமுறையை இலக்காக கொண்ட இடங்களில்

ஆமைக்கப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.



ஊதாரணமாக உதுபத்தவக்குஅப்பால் உள்ள
நிக்கவரெட்டிய,கல்பொக்குனை மற்றும்
பொலன்றறுவைனக்கு அப்பால் அமைந்த நெலும் வெவ
பகுதிகளில் அமைந்த விடுதிகளில் சிலதினங்கள

ஒய்வெடுத்தல் மற்றைய இரு விடுதிகளும் மலையக
பகுதியில் உள்ள போபத்தலாவும் திகனவும் ஆகும்.

மேற்படி இவ்விடுதிகள் ஒவ்வொன்றிலும் 4 முதல் 14
வரையிலான நபர்கள் தங்கக் கூடியதாக
அமைந்துள்ளது.

## ஊழியர்களின் நலன்



தேசிய கால்நடைவளஅபிவிருத்தி சபையானது 2 ஆயிரத்திற்கும் அதிகமான ஆட்பலத்தினை கொண்டுள்ளது.

இவ் ஆட்பலமானது நாட்டில் பரவலாக அமைந்துள்ள தேசியகால்நடை அபிவிருத்தி சபை பண்ணை நடவடிக்கைஈடுபாட்டில் உள்ளது.

பணியாட்களின் தொழில ̇நிலைமைமற்றும் வசதிகள் ஆகியவற்றை சபை அவ்வப்பொழுதுமிகஅவசியமானவற்றை மீள் பரிசீலணை செய்து மேலும ̇சீர்செய்கின்றது.

மீள் பரிசீலணையின் போது பணியாட்களின் மருத்துவ கொடுப்பணவு அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் மருத்துவ காப்புறுதிரூபா 1 லட்சம் வரை அதிகப்பட்டுள்ளதுடன் வெளிவாரி மருத்துவகொடுப்பனம் தற்சமயம் ரூபா 3500 வாக காணப்படுகின்றது.

வீட்டுத்தேவை அடிக்கடி கவனத்திற்கு எடுக்கப்படுகின்றது. வேலிசர பண்ணையில் பணியாட்களுக்கான ஐந்துவிடுதிகள் நிர்மாணிக்கப்பட்டதோடு ஐந்து பண்ணைகளில் உள்ள லைன் வீடுகளும் திருத்தியமைக்கப்பட்டன.

சபையினால் ஒழுங்குசெய்யப்படும் சமய நிகழ்ச்சிகளில் தொழிலாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

காரியாலயதலைமையகத்தில் “பிரித் பின்கம” நடைப்பெற்றது. அத்துடன் “வெசாக் பக்திகீ” காலந்தவறாமல் ஒழுங்காக நடைப்பெறும் நிகழ்ச்சியாகும்.



தேசிய உற்சவநிகழ்ச்சிகளில் “குடும்ப ஒன்றுசேர்” வைபவமும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு நிகழ்ச்சிகளில் பணியாட்கள் கலந்துக் கொள்வதற்கு உற்சாகமூட்டப்படுகின்றது. பணியாட்கள் மத்தியில் கரப்பந்தாட்டம் பிரசித்தி பெற்றவிளையாட்டாகக் கருதப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு முதன்முறையாக உள்ளக பண்ணைகளுக்கிடையியே நடைபெற்ற கரப்பந்தாட்டசுற்றில் பணியாட்கள் அதிக ஆர்வத்தினைக் காட்டினார்கள். தீவிர போட்டியும ̇நடைப்பெற்றது. இறுதி சுற்று பெருந்திரளானமக்கள் மத்தியில் கடேல்கலேயில் அமைந்துனள்ள ஜெயராஜ் பெர்ணாண்டுபுள்ளே உள்ளக விளையாட்டுஅரங்கில் நடைப்பெற்றது.





கடந்தஐந்துவருடத்தினுள்
பௌதீகரீதியிலானசெயலாற்றுகை
கால் நடைமற்றும் பயிர் உற்பத்தி

| நடிவடிக்கை காலநடைஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| பசுமாடுகள | ஏண்ணிக்கை | 8,272 | 8,199 | 8,621 | 8,329 | 8,068 |
| எருமைகள | ஏண்ணிக்கை | 2,114 | 2,130 | 2,191 | 2,409 | 2,534 |
| மொத்தம் | ஏண்ணிக்கை | **10,386** | **10,329** | **10,812** | **10,738** | **10,602** |
| | | | | | | |
| ஆடுகள் | ஏண்ணிக்கை | 1,738 | 1,673 | 1,656 | 1,454 | 945 |
| செம்மறிஆடுகள் | ஏண்ணிக்கை | 2,222 | 2,692 | 2,956 | 3,043 | 3411 |
| பன்றிகள் (இனவிருத்தி) | ஏண்ணிக்கை | 1,306 | 923 | 1,514 | 975 | 1439 |
| கோழிப்பண்ணை | | | | | | |
| புறொயிலர் தாய் குஞ்சுகள | ஏண்ணிக்கை | 26,743 | 29,904 | 29,953 | 33,838 | 32,878 |
| லேயர் தாய் குஞ்சுகள் | ஏண்ணிக்கை | 6.053 | 5,767 | 4,998 | 9,870 | 7,260 |
| வர்த்தகலேயர் | ஏண்ணிக்கை | 21,001 | 15,145 | 6,180 | 4,298 | 7,541 |
| வர்த்தகபுறோயிலர் | ஏண்ணிக்கை | 14,979 | 3,336 | 1,433 | 1,958 | 5,400 |
| காடைகள் | ஏண்ணிக்கை | 8,349 | 6,552 | 46 | 377 | 252 |
| முயல்கள் | ஏண்ணிக்கை | 1,117 | 811 | 507 | 0 | 0 |
| இனுவிருத்திக்கானகால்நடை வழங்கல் | | | | | | |
| பசுமாடுகள் | ஏண்ணிக்கை | 1,153 | 1,200 | 1,033 | 944 | 1,328 |
| எருமைகள் | ஏண்ணிக்கை | 265 | 174 | 128 | 210 | 185 |
| ஆடுகள் | ஏண்ணிக்கை | 267 | 281 | 274 | 218 | 503 |
| செம்மறிஆடுகள் | ஏண்ணிக்கை | 194 | 367 | 312 | 123 | 181 |
| பன்றிகள் | ஏண்ணிக்கை | 1,516 | 2,294 | 1,833 | 3,328 | 2885 |
| முயல்கள் | ஏண்ணிக்கை | 1,403 | 1,071 | 746 | 0 | 0 |
| கோழிக்குஞ்சுஉற்பத்தி | | | | | | |
| புறொயிலர் குஞ்சுகள் (மில்லயன்) | ஏண்ணிக்கை | 2.08 | 2.3 | 1.8 | 1.8 | 2.3 |
| லேயர் (மில்லயன்) | ஏண்ணிக்கை | 0.81 | 0.9 | 0.6 | 1.0 | 1.1 |
| பால் உற்பத்தி | | | | | | |
| பசும்பால் | லீற்றர் மில்லியன் | 2.9 | 3.2 | 3.3 | 3.2 | 2.8 |
| எருமைப்பால் | லீற்றர் மில்லியன் | 0.65 | 0.68 | 0.64 | 0.68 | 0.63 |
| ஆட்டுப்பால் | லீற்றர் மில்லியன் | 22,637 | 23.077 | 27,640 | 13,358 | 10,753 |
| முட்டைஉற்பத்தி (மில்லயன்) | எண்ணிக்கை | 4.1 | 3.4 | 1.9 | 1.0 | 2.0 |
| குாடைமுட்டை | எண்ணிக்கை | 0.25 | 0.21 | 0.05 | 0.02 | 0.04 |
| புறொயிலர் உற்பத்தி (பறவைகள்) | மில்லியன் | 0.09 | 0.09 | 0.01 | 0.01 | 0.03 |
| தெங்குஉற்பத்தி (காய்கள்) | | | | | | |
| தெங்குஉற்பத்தி | மில்லியன் | 21.73 | 20.55 | 21.48 | 20.60 | 19.94 |
| கொப்பராஉற்பத்தி | மெ.தொன் | 537.4 | 278.7 | 336.71 | 247.85 | 227.18 |

# கால்நடைமற்றும் பயிர்ச்செய்கைசம்பந்தமானதகவல்கள்

| நுடிவடிக்கை | ஏண்ணிக்கை | கூறு | ஞவல |
|---|---|---|---|
| புசுமாடுகள் | | 2010 | 2011 |
| மொத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 8,329 | 8,068 |
| 2 வயதுக்குட்டபட்ட இளம் பசுக்கள | ஏண்ணிக்கை | 1,550 | 1,318 |
| 02 வயதுக்குட்டபட்ட இளம் பசுக்கள | ஏண்ணிக்கை | 2,084 | 1,987 |
| ஒருவயதுக்குகுறைந்தகாளைகன்றுகள் | ஏண்ணிக்கை | 957 | 1,102 |
| மொத்தபிறப்புகள | ஏண்ணிக்கை | 2,613 | 2,380 |
| இனவிருத்திக்கானமொத்தவழுங்கல் | ஏண்ணிக்கை | 944 | 1,328 |
| மொத்தவிலக்கள் | ஏண்ணிக்கை | 932 | 349 |
| மொத்த இறப்புகள் | ஏண்ணிக்கை | 631 | 980 |
| பசுக்களின் மொத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 3,430 | 3,443 |
| பால் தரும் பசுக்களின் மொத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 1,519 | 1,404 |
| பாலில் உள்ளபசுக்களின் சதவீதம் | % | 57 | 53 |
| சராசரிஉற்பத்தி.'. பால்பசுநாளாந்தம் | லீற்றர் (மில்லியன்) | 5.8 | 5.6 |
| பால் தரும் பசுக்களின் மொத்தஎண்ணிக்கை | நாட்கள் | 265 | 274 |
| புால் உற்பத்தி | லீற்றர் (மில்லியன்) | 3.2 | 2.8 |
| முதல் பிரசவசராசரிவயது | மாதங்கள் | 34 | 41 |
| பிரசவசராசரி இடைகாலம் | நாட்கள் | 363 | 425 |
| செயற்கைசினையூட்டப்பட்டவிலங்குகளின் | ஏண்ணிக்கை | 3,471 | 3,064 |

| ஏருமைகள் | | | |
|---|---|---|---|
| மொத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 2,409 | 2,534 |
| 2 வயதுக்கு கூடியஎருமைகள் இளம் | ஏண்ணிக்கை | 611 | 527 |
| 02 வயதுக்குட்டபட்ட இளம் பெண் எருமைகள | ஏண்ணிக்கை | 481 | 489 |
| காளைக் கன்றுகளின் எண்ணிக்ளை | ஏண்ணிக்கை | 202 | 422 |
| மொத்தபிறப்புக்கள் | ஏண்ணிக்கை | 642 | 576 |
| இனவிருத்திமொத்தவழுங்கல் | ஏண்ணிக்கை | 211 | 185 |
| மொத்தவிலக்கல்கள் | ஏண்ணிக்கை | 219 | 9 |
| மொத்த இறப்புக்கள் | ஏண்ணிக்கை | 207 | 380 |
| பசுக்களின் எண்ணிக்கை | ஏண்ணிக்கை | 925 | 939 |
| பால் தரும் பசுக்களின் எண்ணிக்கை | ஏண்ணிக்கை | 442 | 394 |
| பால் தரும் பசுக்களின் சதவீதம் | % | 45 | 49 |
| சராசரிஉற்பத்திபசுநாளாந்தம் | லீற்றர் (மில்லியன்) | 6.0 | 4 |
| பால் தரும் காலம் | நாட்கள் | 254 | 281 |
| பால் உற்பத்தி | லீற்றர் (மில்லியன்) | 0.68 | 0.63 |
| 1 ஆவதுபிரசவசராசரிவயது | மாதங்கள் | 52 | 58 |
| பிரசவசராசரி இடைக்காலம் | நாட்கள் | 511 | 432 |
| செயற்றைசினையூட்டப்பட்டவிலங்குகளின் | ஏண்ணிக்கை | 45 | 51 |

| கோழிப்பண்ணைக | ஏண்ணிக்கை | கூறு | ஞவல |
|---|---|---|---|
| புறொயிலர் தாய் குஞ்சுகள் | | 2010 | 2011 |
| மோத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 33,838 | 32,878 |
| பறவைகளின் இறக்குமதி | | | |
| சேவல்கள் | ஏண்ணிக்கை | 7,609 | 1,889 |
| பேடுகள் | ஏண்ணிக்கை | 19,116 | 12,810 |
| மோத்தமுட்டைஉற்பத்தி | ஏண்ணிக்கை | 2,496,626 | 3,574,459 |
| குஞ்சு பொறிக்கக்கூடியஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 2,332,740 | 4,284,521 |
| குஞ்சு பொறிக்கும் தன்மையின் சதவீதம் | % | 76 | 78 |
| கோழிக்குஞ்சுமொத்தஉற்பத்தி | ஏண்ணிக்கை | 1,768,333 | 2,329,205 |
| லேயர் தாய்ப்பறவைகள் | | | |
| மோத்தஎண்ணிக்கை | | 9,870 | 7,260 |
| மொத்தமுட்டைஉற்பத்தி | ஏண்ணிக்கை | | |
| சேவல்கள் | ஏண்ணிக்கை | 1,380 | 1,798 |
| பேடுகள் | ஏண்ணிக்கை | 11,492 | 14,103 |
| மோத்தமுட்டைஉற்பத்தி | ஏண்ணிக்கை | 1,575,334 | 1,919,251 |
| குஞ்சு பொறிக்கக்கூடியமுட்டைகளின் எண்ணிக்கை | ஏண்ணிக்கை | 1,417,274 | 1,755,556 |
| குஞ்சு பொறிக்கும் தன்மையின் சதவீதம் | % | 75 | 75 |
| கோழிக்குஞ்சுமொத்தஉற்பத்தி | ஏண்ணிக்கை | 956,338 | 1,141,007 |
| வர்த்தகபுறொயிலர் உற்பத்தி | | | |
| மோத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 1,958 | 5,400 |
| புறொயிலர் உற்பத்தி | டீசைனள | 7,114 | 37,161 |
| வுர்த்தகமுட்டைஉற்பத்தி | | | |
| மோத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 4,298 | 7,541 |
| பேடுகளின் | ஏண்ணிக்கை | 6,466 | 7,944 |
| மொத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 1,042,385 | 2,095,328 |
| பன்றிகளின் செயற்பாடு | | | |
| மோத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 975 | 1,439 |
| பிறந்தபன்றிகுட்டிகள் | ஏண்ணிக்கை | 3,228 | 3,571 |
| சுராசரிபருமன்பன்றிபெண் | ஏண்ணிக்கை | 9 | 8 |
| சுராசரிபருமன்பன்றிஆண் | ஏண்ணிக்கை | 8 | 8 |
| இறுந்தபன்றிஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 294 | 313 |
| ஆடுகளின் செயற்பாடு | | | |
| இனுவிருத்திக்காகவழங்கியஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 1,454 | 945 |
| பிறந்தகுட்டிகளின்எண்ணிக்கை | ஏண்ணிக்கை | 642 | 374 |
| குட்டிபோடும் வீதம் | ஏண்ணிக்கை | 0.78 | 0.61 |
| இறப்புக்களின் எண்ணிக்கை (குட்டிகளும்,வளர்ந்தவையும்) | ஏண்ணிக்கை | 191 | 355 |
| இனுவிருத்திக்காகவழங்கியஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 218 | 503 |
| செம்மறிஆடுகளின் செயற்பாடு | ஏண்ணிக்கை | | |
| மோத்தஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 3,043 | 3,411 |
| பிறந்தஆட்டுகுட்டிகள | ஏண்ணிக்கை | 1,434 | 1,294 |
| குட்டிபோடும் வீதம் | ஏண்ணிக்கை | 0.75 | 0.76 |
| இறப்புக்களின் எண்ணிக்கை (குட்டிகளும்,வளர்ந்தவையும்) | ஏண்ணிக்கை | 188 | 323 |
| இனுவிருத்திக்காகவழங்கியஎண்ணிக்கை | ஏண்ணிக்கை | 123 | 181 |

# நிதி அறிக்கை
# 2011

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No — ஏஎப்/டீ/என்எல்டீபீ/எப்ஏ/2011 | මබේ අංකය<br>உமது இல<br>Your No | දිනය<br>திகதி<br>Date — 2012 ஒக்டோபர் 16 |

தலைவர்,

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை

**தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 மே 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

ரூபா 62,931,670 தொகையான பசும் பால் விற்பனைக்கூடங்களைப் பெறுமானத்தேய்விடுவதற்காக முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதம் 20% முதல் 25% வரை அதிகரித்து பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 18 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சோளப் பயிர்ச்செய்கைக்கு பண்ணைகளைத் தயாரிப்பதற்காக ஏற்பட்ட ரூபா 5,449,714 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தொகையான ரூபா 2,081,750 மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 12,444,661 தொகையான திரண்ட இருப்புப் பற்றாக்குறையும் உள்ளடங்கலாக இறுதி இருப்பு புத்தக பெறுமதி கணக்கிடப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான தேறிய இலாபம் அப் பெறுமதியினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிகவெரட்டிய பண்ணையில் இருந்து தெதுரு ஓய நீர்ப்பாசனச் செயற்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 120 ஏக்கர் பெறுமதியான நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சோளச் செயற்திட்டத்திற்குரிய 2009 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 2,300,598 தொகையான அறவிடப்பட வேண்டிய தொகை விவசாயிகளிடம் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை பிரதேச விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் ரூபா 1,070,435 தொகையான கோழிக் குஞ்சுகள் மாரவில பண்ணைகளினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கரந்தகொல்ல மற்றும் மிரிஸ்வத்த பண்ணைகளில் காணப்பட்ட 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் முறையே ரூபா 243,718 மற்றும் ரூபா 240,000 ஆக இருந்ததுடன் அத் தொகைகளை அறவிடப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஈ) வீரவில பண்ணைகளில் இரு ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ஊழியர் வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 255,442 தொகையும் வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 300,626 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ரிதியகம பண்ணையின் இரு ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ஊழியர் வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 101,907 வும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 392,196 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 01 ஆண்டிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 43,232,632 பெறுமதியான கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 17,768,762 மாத்திரம் அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் போது ரிதியகம பண்ணையில் சோளம் வழங்கப்பட்டிராத மூன்று விவசாயிகளிடம் இருந்து ரூபா 221,038 அறவிடப்படுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1992 ஆம் ஆண்டின் போது திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 50,000,000 வட்டியற்ற கடன்தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கபடாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை வங்கி - கந்தளாய் | 598,309 | (i) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று<br>(ii) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| மக்கள் வங்கி - கந்தளாய் | 13,721 | |
| மக்கள் வங்கி – தலைமைக் காரியாலயம் | 249,064 | |
| நடைமுறை வேலை | 25,848,048 | பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழுடன் விபரமான பட்டோலை |
| கடன்கொடுத்தோர் | 210,527,092 | கடன்கொடுத்தோர் பட்டோலை |
| பால் செயற்திட்டத்தில் இருப்புக் கணக்கு செலவு மீதி | 90,182 | (i) செலவு மீதி ஏற்படக் காரணம்<br>(ii) விபரமான பட்டோலை |
| பால் செயற்திட்டத்தில் காசுப் பற்றாக்குறை | 34,430 | பற்றாக்குறை தொடர்பான ஆராய்ச்சி அறிக்கை |
| நாட்குறிப்புப் பதிவு | - | உரிய விளக்கங்கள் |
| அறவிடப்பட வேண்டிய சேமலாப நிதியத் தண்டப்பணம் | 93,543 | பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட நபர்கள் தொடர்பான விபரம் |
| டோசருக்கான வெளித்தரப்பினர் வழங்கிய எரிபொருள் | 284,699 | எரிபொருள் பட்டியல்கள் |

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | | |
| | (i) 10(5) ஆம் பிரிவு | 248,688,654 | தேறிய மிகை வருமானத்தில் எஞ்சிய சகல பணமும் திரண்ட நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட இலாபம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 16(2) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 21,812,323 | வங்கி மேலதிகப்பற்று பெறப்பட முன்னர் நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் | | |
| | (i) நி.பி. 165 | 14,607 | பெறப்பட்ட பணம் தனியான காசேட்டில் பதியப்பட வேண்டிய போதிலும் வீரவில விவசாயப் பண்ணையில் இருந்து உழைக்கப்பட்ட பணம் காசேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நி.பி. 187(1) | 19,794 | கிடைக்கப்பெற்ற சகல பணமும் பாதுகாப்பான முறையில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் வீரவில பண்ணையினால் அவ்வாறு வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 மே 26 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திர இல: 11/0927/511/004-I | 3,831,431 | கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு தொடர்பான சர்வதேச கண்காட்சிக்காக அரசின் நிதியத்தைப் பயன்படுத்தலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டளைக்கு மாறாக கண்காட்சிக்காக சபையினால் பணம் செலவிடப் பட்டிருந்தது. |
